# FRANKLIN LAW FIRM

**அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

1. **ஆலோசனைக்கான என்னுடைய முதல் சந்திப்பில் என்ன நேரிடும்?**

நம் முதல் சந்திப்பில், Franklin Hall LLP உங்கள் கோரலின் பொதுவான தகவல்களைச் சேகரிப்பார்கள். வழக்கறிஞர தொடர்புரிமை ஒப்பந்தத்திலும், அனுமதிப் படிவங்களிலும் நீங்கள் கையெழுத்திடுவீர்கள். உங்கள் வழக்கை மதிப்பிடத் தேவையான எல்லா ஆவணங்களையும் பெறுவதற்கு, தீர்வு பெறப் பேரம் பேசுவதற்கு மற்றும் உங்கள் சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எங்களை இது அனுமதிக்கிறது. இதன் பிறகு நாங்கள் எங்களது பொது யுக்தியைப் பற்றி உங்களிடம் விவாதிப்போம் மற்றும் உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் அவற்றுக்கு பதிலளிப்போம். இந்த ஆலோசனை இலவசமானது. **எங்கள் ஆலோசனை இலவசமானது. நீங்கள் எங்களை நியமிக்க முடிவுசெய்யவில்லை என்றால், உங்களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்கப் பட மாட்டாது**. Franklin Hall LLP ஆலோசகராக அமர்த்தப்பட்ட உடனே, உங்கள் பிரதிநிதியாக நாங்கள் நியமிக்கப்பட்டுள்ளதையும் நீங்கள் சலுகைகளுக்கு பாத்தியதை கோருவதையும் உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்போம். நாங்கள் ஆலோசகராக நியமிக்கப்பட்ட உடன், நீங்கள் காப்புறுதி நிறுவன(ங்களில்) இருக்கும் எவரையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளத் தேவையில்லை - உங்கள் சார்பாக நாங்கள் அவர்களைக் கையாளுவோம். தங்கள் கோரல்களை நேரடியாகக் கையாண்டு கொண்டிருந்த பலர், அவர்களுடைய காப்புறுதி நிறுவன(ங்களுடனான) எங்களின் நேரடி ஈடுபாடானது, அவர்களின் மன உளைச்சலை வெகுவாக விடுவிப்பதைக் காண்கிறார்கள். ஆவணப் பணிகள் அனைத்தையும் நாங்கள் உங்கள் சார்பாக நிறைவு செய்வோம் மற்றும் உங்கள் பராமரிப்புடன் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களையும் தொடர்பு கொள்வோம். வழக்கிற்குத் தொடர்புடைய அனைத்து மருத்துவத் தகவல்களைக் கோருவதோடு, காவல் துறையிடமிருந்தும், உங்கள் அலுவலகத்திடமிருந்தும் பதிவேடுகளைப் பெறுவோம் (தேவையெனில்).

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

2. **என்னுடைய வழக்கு மற்றும் அதன் தீர்வு குறித்து மதிப்பிட எவ்வளவு காலமாகும்?**
இழப்புகள் தீர்மானிக்கப்படாத வரையில் மற்றும் அனைத்து விசாரணைகளும் நிறைவு பெறாத வரையில், உங்கள் வழக்கைத் தீர்க்க இயலாது - தீர்க்கக் கூடாது. பொதுவாக, தேவையான தகவல்கள் சேகரிக்கப் பல மாதங்கள் ஆகலாம் மற்றும், வழக்குத் தொடுக்க வேண்டுமென்றால், இன்னும் அதிக காலமாகலாம். உங்கள் வழக்கைத் தீர்க்க உங்களுக்கு ஒரே ஒரு வாய்ப்பு தான் உள்ளது. ஆகையால், நீங்கள் அனுகூலமான நேரத்தில் உங்கள் வழக்கைத் தீர்ப்பது கட்டாயமாகும். இதற்கு உங்களுக்குப் பொறுமை தேவை. ஒவ்வொரு வழக்கும் வெவ்வேறு விதமாக நடக்கும் என்பதால், உங்கள் வழக்கு முடிவுற எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைக் கூற இயலாதது. மிகக் கடுமையான காயங்கள் தொடர்பான வழக்குகளைத் தீர்க்க அதிக காலம் பிடிக்கலாம். எங்களுக்குத்தேவையான எல்லாத் தகவல்களும், ஆவணங்களும் கிடைத்தவுடன், நாங்கள் காப்புறுதி நிறுவனத்தை; விபத்து உதவிப்படிக்கான கோரலென்றால் உங்கள் காப்புறுதி நிறுவனத்தையும், கோரல் உங்களுக்கு ஏற்பட்ட “தீங்கு” சம்பந்தப்பட்ட கோரலென்றால் (அதாவது வலியும், துன்பமும் மற்றும்/அல்லது வருமான இழப்பும் நேர்ந்தால்) “தவறு செய்த” வண்டி ஓட்டுனரின் காப்புறுதி நிறுவனத்தையும் தொடர்பு கொள்வோம். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண நாங்கள் முயலுவோம். எந்த ஒரு சமரசத் திட்டதையும் ஒப்புக்கொள்வதற்கு முன்னர் உங்கள் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு நாங்கள் கடமைப் பட்டுள்ளோம். உங்களுடைய ஈடுபாடு இன்றி, உங்கள் கவனத்திற்கு கொண்டு வராமல் மற்றும் உங்கள் ஒப்புதல் இன்றி எந்த விதமான சமரசத் திட்டமும் நிறைவேற்றப்படாது.

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

3. **என்னுடைய வழக்கு தலையீட்டிற்கு உட்படுத்தப்படுவதின் பொருள் என்ன?**
கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள், வழக்கு விசாரணைக்கு முந்தைய விசாரணைகள், முன்-விசாரணகள், தலையீடுகள் மற்றும் மத்யஸ்தங்கள் போன்ற மற்ற விசாரணைகளில் நீங்கள் கலந்துகொள்ள வேண்டியிருக்கும் மற்றும்/அல்லது சான்று அளிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு நேருமானால், நீங்கள் அதற்கு முன்னர் எங்களால் நன்கு பயிற்சி அளிக்கப்படுவீர்கள் மற்றும் ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களுக்குத் தேவையெனில், உங்களுக்கு உதவ ஒரு மொழி பெயர்ப்பாளரை நாங்கள் ஏற்பாடு செய்வோம். வழக்கின் சமரசத் திட்டத்தை விவாதிப்பதற்கு வழக்கு விசாரணைகள் வழக்கறிஞர்களுக்கு வாய்ப்பை அளிக்கின்றன, அதே வேளையில் வழக்கை முடிப்பதற்கான ஒரு அருமையான சந்தர்ப்பத்தை தலையீடுகள் அளிக்கின்றன. பல வழக்குகள் மத்யஸ்தம் மூலம் தீர்க்கப்பட்டிருப்பதை நாங்கள் எங்கள் அனுபவத்தில் கண்டிருக்கிறோம்.

4. **என்னுடைய வழக்கைத் தீர்க்க முடியாவிடில் என்ன நடக்கும்?**
தொடக்கத்தில் நாங்கள் வழக்கைத் தீர்க்க முடியாவிட்டால், அதை பிற்பாடு தீர்ப்பதற்கு வேறு வாய்ப்புகள் உண்டு. எங்கள் அடுத்த முயற்சி, அநேகமாக ஒரு கோரல் அறிக்கையை அனுப்பி சம்பிரதாயமாக வழக்கைத் தொடருவதாக இருக்கலாம். நாம் அவசியம் பின்பற்றுவதற்கான கால வரையறைகளும் உண்டு மற்றும், சில சமயங்களில், ஆரம்ப கட்டங்களிலேயே கோரலை அனுப்ப வேண்டியிருக்கும். நீதிமன்றத்தில் கோரல் சமர்ப்பிக்கப்பட்டாலும், மிகச் சில வழக்குகளே விசாரணை வரை போவதால், நீங்கள் விசாரணைக்கு வருவதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. நீதிமன்ற விசாரணையின் முடிவு சமரசத் திட்டத்தைப் போல் தீர்மானிக்க இயலாததால், எப்போதும் நீதி மன்றத்திற்கு வெளியே வழக்கைத் தீர்க்க நாங்கள் முயலுவோம்.

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*

5. **வழக்கின் போது நான் சாட்சி சொல்ல நேரிட்டால் என்ன செய்வது**?
உங்கள் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்குத் தொடர்ந்தால், சாட்சி சொல்ல நீங்கள் அங்கு செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறு நேருமானால், நீங்கள் அதற்கு முனனர் எங்களால் நன்கு பயிற்சி அளிக்கப்படுவீர்கள். தேவையெனில், உங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை நாங்கள் ஏற்பாடு செய்வோம். ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ அல்லது கவலைகளோ இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத்தொடர்பு கொள்ளவும்.

*ஒவ்வொரு வழக்கும் வித்தியாசப்பட்டாலும், எங்களுடைய பொதுவான குறிக்கோள் உங்கள் வழக்கில் சிறந்த முடிவைப் பெறுவதேயாகும். உங்களுக்கு ஏதேனும் கேள்வி அல்லது பிரச்சினை இருந்தால், தயவு செய்து இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளவும்.*